1993 மார்ச் 31]

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

அறந்தாங்கி ஒன்றியம், பாலகிருஷ்ணாபுரத்தை பேராவூரணி ஒன்றியத்துடன் இணைப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

193—

செந்துறையில் தொழிற்பயிற்சி மையம் அமைக்கும் திட்டம்.

*16274— திரு. ஆர். தங்கராஜ்:

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறையில் ஒரு தொழிற் பயிற்சி மையம் (I.T.I.) அமைக்கும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறையில் ஒரு அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

196—

கெலவரப்பள்ளி அணையின் கீழ்ப்பகுதியில் தோட்டக் கலைத் துறை மூலம் பூந்தோட்டம் அமைத்தல்.

*17143—திரு. கே. ஏ. மனோகரன்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெலவரப்பள்ளி அணை திட்டப் பகுதியில் அணையின் கீழ்ப்பகுதியில் தோட்டக்கலைத் துறையின் மூலமாக அழகான பூந்தோட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?